இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 19.07.2026

# போலீஸ் ராஜ்யம் நடத்தும் விஜய்!

முதலமைச்சர் விஜய் கையில் லத்தி இல்லையே தவிர,போலீஸ் ஆட்சியைத்தான் அவர் நடத்தி வருகிறார். எதிர்க் கருத்துச் சொல்கிறவர்கள் அனைவரையும் வழக்குப் பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைப்பதில் குறியாக இருக்கிறது குதிரை பேர அரசு.

100 கோடி ரூபாய் மதிப்பிலான பழனி கோவில் சொத்தை, 2 கோடிக்கு தனியாருக்குத் தாரை வார்த்து விட்டு, மாட்டிக் கொண்டதும் பேய்முழி முழிக்கிறார் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ். அதுகுறித்து சமூக வலைதளத்தில் விமர்சனம் செய்கிறவர்களை, ‘வழக்குப் போட்டுவிடுவேன்’ என்றும் மிரட்டுகிறார்.

**பழனி கோயில் நிலத்தை மோசடியாக விற்ற விவகாரத்தில் அமைச்சர் ரமேஷ் மீது சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பினார் என்று வினோத் சூர்யா குமார் என்பவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட வினோத் சூர்யா குமார் மீது பொது அமைதியைக் குலைப்பது, கலவரத்தைத் தூண்டும் வகையில் செயல்படுவது என விஜய் அரசு வழக்குப்பதிவு செய்துள்ளது. சாதாரணமாக ஒரு விமர்சனத்தை அமைச்சர் மீது வைத்ததற்காக அவதூறு வழக்கு எனப் பதிவு செய்யாமல் கலவரத்தைத் தூண்டுவதாக வழக்குப் போடுகிறார்கள். இதனைத் தான் போலீஸ் ராஜ்யம் என்கிறோம்.**

தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி வினோத் சூர்யா குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, “சமூக வலைதளப் பதிவுக்கு அவதூறு வழக்குதானே தொடர முடியும்?” என்று மிகச் சரியான கேள்வியை எழுப்பினார்.

‘தவறான பிரிவில் வழக்குப்பதிவு செய்வதைத் தவிர்க்குமாறு அரசுக்கு அறிவுறுத்துங்கள்’ என்று அரசு குற்றவியல் வழக்கறிஞரிடம் நீதிபதி அறிவுறுத்தினார். வழக்கு தொடர்பாக காவல்துறை பதிலளிக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது. தன் மீதான விமர்சனங்களைத் தாங்க முடியாமல் இதுபோல மிரட்டுவதை வழக்கமாக வைத்துள்ளது விஜய் அரசு.

விஜய் அரசின் போலீஸ் ராஜ்யத்துக்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும்.

★ யூடியூப்பில் விஜய் அரசு மீது கடுமையான விமர்சனங்களை வைத்தார் என்று ஜூன் 8 ஆம் தேதியன்று மதுரையில் மாரிதாஸ் கைது செய்யப்பட்டார். நீதிமன்றம் அவரை சொந்த ஜாமீனில் விடுவித்தது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம் - ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தில் வசிப்பவர் அன்பானந்தம் (28). தி.மு.க.வின் ஜென்-சி ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினராக உள்ளார். இவர் தமிழக முதல்வர் விஜய், நடிகை த்ரிஷாவுடன் பிறந்தநாள் கொண்டாடியது குறித்து விமர்சனம் செய்து வீடியோ ஒன்றைப் பதிவிட்டு இருந்தார். உடனே இவரைத் தேடி போலீஸ் வந்துவிட்டது.

இதை அறிந்த அன்பானந்தம் தேன்கனிக்கோட்டை நீதிமன்ற நீதிபதி தினேஷ்குமார் முன்னிலையில் சரணடைந்தார். அவரை விசாரிக்க நீதிபதி அனுமதித்தார். ஒரு நாள் போலீஸ் விசாரணையில் இருந்த அன்பானந்தத்தை நீதிபதியே நிபந்தனை ஜாமீனில் விடுவித்து விட்டார்.

★ முன்னாள் அமைச்சர், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணனை படுத்திய பாடு நாடறியும். முதலமைச்சர் விஜய் பற்றி அவதூறாகப் பேசியதாக ஆத்தூர் காவல்துறையினரால் தூத்துக்குடி மாவட்டம் - ஆத்தூரில் கைது செய்யப்பட்டார் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன். கைது செய்யப்பட்ட அன்றே அவருக்கு நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது.


★ **‘பவுடர்’ அடித்து மாட்டிக் கொண்டார் அமைச்சர் சரத்குமார். அந்த வீடியோவை வெளியிட்டார் என்று தாம்பரத்தைச் சேர்ந்த சரண் ஜெயராமன் தேடப்பட்டார். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று பேட்டியே கொடுத்தார் சரண் ஜெயராமன். அவரை வேறு ஒரு வழக்கில் திடீரென கொளத்தூர் போலீஸார் கைது செய்தார்கள்.**


**வழக்கை விசாரித்த சென்னை எழும்பூர் நீதிமன்ற நடுவர், போலீசார் சட்டப்படியான சரியான நடைமுறைகளைப் (legal process) பின்பற்றாமல் இந்தக் கைதை மேற்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார். காவல்துறை தரப்பின் ரிமாண்ட் (Remand) கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிமன்றம், சரண் ஜெயராமனின் கைதை உடனடியாக ரத்து செய்து (Cancel) அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது. எந்தளவுக்கு பழிவாங்கும் நோக்கத்தோடு கைது நடவடிக்கைகள் விஜய் அரசால் செய்யப்படுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.**

★ ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியில் விவாதங்கள் நடத்தும் ஊடகவியலாளர் விஜயனை, விசாரணை என்ற பெயரால் மிரட்டி அனுப்பி இருக்கிறார்கள். குதிரை பேரத்தால் உருவான விஜய் ஆட்சி, மற்றவர்கள் மீது குதிரை பேர குற்றச்சாட்டை வைத்து திசை திருப்பி வருகிறது. இதில் சம்பந்தப்பட்ட ஒருவர், ஊடகவியலாளர் விஜயனிடம் பேசியதாகச்சொல்லி, அவரை திருவல்லிக்கேணி காவல் துறை விசாரணைக்கு அழைத்து மிரட்டி உள்ளனர்.

சென்னை பத்திரிக்கையாளர் மன்றப் பொதுச்செயலாளர் அசீப் இது குறித்து அளித்துள்ள பேட்டியில், “விஜயனை இரவு 10 - 12 மணி வரையும் விசாரணை செய்துள்ளார்கள். அவர் வீட்டிற்குச் சென்றவுடன் மீண்டும் 2 மணிக்கு வரச் சொல்லி விசாரணை செய்துள்ளனர். மீண்டும் காலை 11 மணிக்கு வர வைத்து 11 - 5 மணி வரை விசாரணை என்று அலைக்கழித்துள்ளனர். அப்போது அவரிடம் இருந்து மொபைல் போனையும் பறிமுதல் செய்துள்ளனர். இந்த விசாரணையில், ‘யார் பெயரையாவது சொல்லுங்கள்’ என்று தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. அடிப்படை உரிமைக்கும், கருத்துரிமைக்கும் எதிரான செயல்” என அவர் சொல்லி இருக்கிறார்.

**குற்றங்கள் அதிகமாகி விட்டன. த.வெ.க. நிர்வாகிகள் செய்யும் குற்றச் செயல்களும் அதிகமாகி விட்டன. ஊழல்கள் தொடங்கி விட்டன. ஒவ்வொரு அமைச்சராக அம்பலப்பட்டு வருகிறார்கள். இவை அனைத்தையும் மறைக்கவே போலீஸ் பாணியை கையில் எடுத்து அராஜக ஆட்சியை நடத்தி வருகிறார் முதலமைச்சர் விஜய்.**





சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி. எஸ்.ரவி (எ) சிவகுமாரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசன் – டாக்டர் வி.கார்த்திகா ராஜம் திருமண விழாவில் கழகப் பொருளாளர், கழக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். உடன் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக சட்டதிட்டத் திருத்தக்குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### இலண்டனில் இருந்து இன்று (19-ஆம் தேதி) காலை சென்னை திரும்பும்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்திடுவீர்!

## காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், ஜூலை. 19-*

இருவார சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு லண்டனில் இருந்து இன்று (19ஆம் தேதி) காலை 7.00 மணியளவில் சென்னை திரும்பும் முன்னாள் முதல் அமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் சென்னை விமான நிலையத்தில் அலைகடலென திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

முன்னாள் முதல் அமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 4ஆம் தேதி காலை இருவார கால சுற்றுப்பயணமாக இலண்டன் புறப் பட்டுச் சென்றார். அவருடைய மனைவி துர்கா ஸ்டாலின் அவர்களும் அவருடன் சென்றார்.

இருவார கால இலண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குடும்பத்துடன் இன்று (19ஆம் தேதி) காலை 7.00 மணியளவில் தாயகம் திரும்புகிறார்.



சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள சர்வ தேச விமான நிலையத்தை இன்று காலை வந்தடையும் கழகத் தலைவர் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேள தாளம், பாண்டு வாத்தியம் முழங்க, கழகத்தினர் வாழ்த்தொலியுடன் மிகவும் எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள சர்வதேச விமான நிலைய முனையத்தை விட்டு வெளியே வரும் நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் அவர்களுக்கு காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அளிக்கப்பட உள்ள பிரம்மாண்டமான வரவேற்பில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகக் கொடியையும், வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து விண்ணைப் பிளக்கும் வகையில் வாழ்த்து முழக்கங்களை எழுப்பி மிகப் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கிறேன்.

இந்த மாபெரும் வரவேற்பில் நாம் பங்கேற்பது “நமது கடமை”,”நமது உரிமை” என்ற அந்த இலட்சிய உணர்வோடு கழகத்தினர் அனைவரும் நாளை காலை 7.00 மணிக்கெல்லாம் அணி திரண்டு வந்து மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி – திண்டுக்கல் அரசு போக்குவரத்துக் கழகத்தில்

# பணி மூப்பு அடிப்படையில் - சுழற்சி முறை பணி வழங்க வேண்டும்!

## அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. கோரிக்கை!

*திண்டுக்கல். ஜூலை.19-*

திண்டுக்கல் அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, பொதுச்செயலாளர் பொன்.செந்தில் தலைமை வகித்தார். பிரச்சார செயலாளர் முத்துராமன், மத்திய சங்க செயலாளர்கள் ஜெகன் பாலு, முருகப்பெருமாள் முன்னிலை வகித்தனர்.

இதில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மண்டலத்தில், திண்டுக்கல், தேனி மாவட்டம் 2 மாவட்டங்கள் உள்ளது. சுமார் 700க்கும் மேற்பட்ட பஸ்கள் இயங்குகிறது.

திண்டுக்கல்லில் இருந்து குமுளி, பழனி, மதுரை, கரூர், சேலம், ஈரோடு, திருச்சி உட்பட பல மாவட்டங்களுக்கு பஸ்கள் இயக்கப்படுகிறது.

இந்நிலையில், திண்டுக்கல் மண்டலத்தில் போதுமான அளவில் டிரைவர்கள், கண்டக்டர் இல்லாததால், நீண்ட நாட்களாக ஒரே ரூட்டில் தொடர்ந்து டிரைவரும் நடத்துனரும் பலர் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் அதிகாரிகள் சுழற்சி முறையில் பணி என்ற பெயரில் ஓட்டுநர் நடத்துனரை சில நாட்களாக பணி மாற்றம் செய்து வருகின்றனர்.

இது ஓட்டுநர் நடத்துனர் இடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. ஓய்வு பெறுவதற்கு சில மாதங்கள் உள்ள நிலையில் பல தொழிலாளர்கள் உள்ளனர். நகரப் பஸ்களில் பணி புரிந்து வரும் டிரைவர், கண்டக்டர்களை நீண்ட தூரம் செல்லும் மொபசல் பஸ்களில் பணி புரிய நிர்பந்தப்படுத்துகின்றனர்.

வயது மூப்பின் காரணமாக பல்வேறு நோய்களை கொண்டுள்ள சிலர், எங்களால் எப்படி இரவு பகலாக செல்லும் நீண்ட தூர பஸ்களை பாதுகாப்பாக இயக்க முடியும். சுழற்சி முறை பேஜ் என்று சொல்லி டிரைவர் கண்டக்டர்களுக்கு ஆறு மாதத்துக்கு ஒரு பஸ் வீதம் பணிபுரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

அதிகாரிகள் செய்யும் இந்த நடவடிக்கையால், டிரைவர் கண்டக்டர்கள் நிர்வாகத்தின் மீது அதிருப்தியில் உள்ளனர். எனவே போக்குவரத்து நிர்வாகம் கடந்த காலங்களில் செயல்பட்ட முறையிலேயே செயல்பட வேண்டும். சுழற்சி முறை பேஜ் முறையை கைவிட வேண்டும். பழைய முறையிலேயே தொடர வேண்டும். அப்போது தான் போக்குவரத்து தொழிலாளர்கள் கவனமாக மன உளைச்சல் இல்லாமல் பணியாற்ற முடியும். என தெரிவித்தனர். மேலும் இந்த மன உளைச்சலில் கடந்த 10 தினங்களுக்குள் இரண்டு போக்குவரத்து ஊழியர்கள் மரணம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றக் சங்க பொதுச் செயலாளர் பொன்.செந்தில் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் வழங்கப்பட்ட உத்தரவுப்படி பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறை பணி வழங்காமல், மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் மற்றும் திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தன்னிச்சையாக முடிவெடுத்து, கிலோ மீட்டர் அடிப்படையில் சுழற்சி பணி உருவாக்கி, அதில் தான் பணி புரிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர். இதில் மலை வழித் தடங்களில் இதுவரை பணிபுரியாத மூத்த ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களை நியமித்து கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் பெரும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. நகரப் பஸ்களில் பணிபுரிந்த டிரைவர்களை நெடுந்தூர பஸ்களில் பணிபுரிய நிர்பந்தப்படுத்துகின்றனர். இதனால் டிரைவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இது குறித்து தொழிற்சங்கங்கள் நீதிமன்ற ஆணைப்படி பணி வழங்க வேண்டும் என்று கூறியும், அதனை பொருட்படுத்தாமல் மதுரை கோட்ட மேலாண் இயக்குனர் மற்றும் திண்டுக்கல் மண்டல பொது மேலாளர், தங்கள் நினைத்ததை சாதித்தே ஆக வேண்டும் என்று, கிலோமீட்டர் அடிப்படையில் தான் பணி புரிய வேண்டும் என்று கூறி வருகின்றனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி பல தொழிலாளர்கள் மருத்துவ விடுப்பில் செல்கின்றனர். ஆகையால் அரசு உடனடியாக தலையிட்டு பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறை பணி வழங்க வேண்டும், எனத் தெரிவித்தார்.



இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் 221வது நினைவு தினத்தை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், காரமடை நகர தி.மு.க. மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் காரமடை கார் ஸ்டாண்ட் அருகே வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மாலை அணிவித்து மறுபடியும் மரியாதை செலுத்தினர். இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.